(ஆ) ஆம் என்றால் அந்த வேலை இன்னும் முடியாமல் பாதியில் விட்டுவிடுவதற்கு காரணம் என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) இல்லை. (ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ரோடு எஸ்டிமெட் போட்டு சாங்ஷன் செய்யப்பட்டு வேலை ஆரம்பித்து வேலை ஓரளவு போடப்பட்டுள்ளது. ஆனால் அமைச்சர் அவர்கள் அது இல்லை என்று சொல்வதன் அர்த்தம் என்ன ஏற்கனவே எடுத்துக்கொள்ளப்பட்டது என்று மக்கள் சொல்கிறார்கள் இலாக்காவினர் சொன்னார்களே அதனுடைய உண்மையான நிலைமை என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, மதிப்பீடுதான் தயாரிக்கப்பட்டதே தவிர, வேலை ஆரம்பிக்கப்பட்டதற்கான எந்தவிதமான குறிப்பும் இங்கே தரப்படவில்லை. இதுவரை போஸ்ட்—வார் டெவலப்மென்ட் ஸ்கீம் என்ற திட்டத்தின் அடிப்படையில் மண்சாலை போடப்பட்டது. ஆனால் இப்போது அந்த திட்டத்திற்கு 7 லட்சத்து 30 ஆயிரம் ரூபாய் தேவைப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அது இந்த அரசின் எந்தத் திட்டத்திலேயும் இதுவரையில் வரவில்லை ஆகவே நிதிநிலைமை சரியானவுடன் எடுத்துக்கொள்ளப்படும்.

[முற்பகல் 9.20]

திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள்: பேரவைத் தலைவர் அவர்களே, ஏழு லட்சத்திற்குத்தான் மதிப்பீடு போடப்பட்டது என்று கனம் அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். அந்த ஏழு இலட்சம் ரூபாயைச் செலவு செய்து இந்த நடப்பாண்டிலேயே அந்தச் சாலை எடுத்துக் கொள்ளப்பட்டு, மலைப் பகுதியில் வாழ்கின்ற அந்த மக்களின் குறைகள் போக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரர்களே, நிதிநிலை சரியானால் இந்த ஆண்டே எடுத்துக்கொள்ளப்படும்.

கேளம்பாக்கம்—கோவளம் பாதையினிடையே உள்ள மேம்பாலம்.

*வினா எண். 680.—திரு கெ.. சொக்கலிங்கம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) செங்கல்பட்டு மாவட்டம் திருப்போரூர் ஒன்றியம் கேளம்பாக்கத்திலிருந்து கோவளம் செல்லும் பாதையில் மத்தியில் உள்ள மேம்பாலம் இடிந்து விழுந்து சாலை மூடப்பட்டு உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) தேங்கியுள்ள உப்பங்கழி நீர் மற்றும் உப்புக்காற்று தன்மையால் பாலத்தின் இரும்புக் கம்பிகள், ஆர். எஸ், ஜே. உத்திரங்கள் துருப்பிடித்து வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இதனைப் பழுது பார்க்கும் வேலை நடந்து கொண்டு இருப்பதால் இச் சாலையின் பகுதி போக்குவரத்து தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

(ஆ) இப்பாலத்தை பழுதுபார்ப்பதற்காக ரூ 1.00 இலட்சம் செலவில் மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டு, பழுதுபார்க்கும் வேலைகள் நடைபெற்று வருகின்றன.

மருதையாற்றின் குறுக்கே பாலம்.

*வினா எண். 681.—திரு. என். பெருமாள்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) திருச்சி மாவட்டம் — ஆலத்தூர் கேட்டையும் அரியலூரையும் இணைக்கும் வகையில் மருதையாற்றின் குறுக்கே பாலம் கட்டும் உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் எனில் அதற்காக அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) இல்லை

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. என். பெருமாள்: பேரவைத் தலைவர் அவர்களே, சுதந்திரம் பெற்று 33 ஆண்டு காலமாகியும் என்னுடைய வரகூர் தொகுதியில் ஆலத்தூர் கேட்டையும் அரியலூரையும் இணைக்கும் வகையில் மருதையாற்றின் குறுக்கே பாலம் கட்டப்படாமல் இருக்கிறது. அமைச்சரவர்கள் தங்கள் பதிலில் இல்லை என்று கூறினார்கள். திரும்பவும் பரிசீலனை செய்து அந்தப் பாலத்தைக் கட்டித் தருவதற்கு நமது அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, சுதந்திரம் பெற்று 33 ஆண்டுகளுக்குப் பின்னால்தான் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. 25 இலட்சம் ரூபாய் தேவைப்படும் என்ற மதிப்பீட்டின் காரணமாக, நிதிநிலை சரியில்லாத காரணத்தினால் இப்பொழுது ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது.